Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 333

செவ்வாய்க்கிழமை
25 ஒக்ரோபர் 2022

ஐப்பசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை.: ரூ. 50

## வங்கக் கடலில் 'சிட்ரங்' சூறாவளி!

### கனமழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக். 25

வங்காள விரிகுடாவை அண்மித்த பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் தற்போது சூறாவளியாக வலுவடைந்துள்ளது. இதற்கு 'சிட்ரங்' என பெயரிடப்பட்டுள்ளது.

11 ➤

### வடக்கு மாகாணத்தில்

# பாடசாலை இடைவிலகல் சடுதியாக அதிகரிப்பு!!!

## பொருளாதார நெருக்கடியும் காரணம் என்கிறார் பணிப்பாளர்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25**

**கொரோனா பெருந்தொற்றுக் காலத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. 2020ஆம் ஆண்டு 485ஆகவும், 2021ஆம் ஆண்டு ஆயிரத்து 105 ஆகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 519 ஆகவும் இடைவிலகிய மாணவர்கள் எண்ணிக்கை உள்ளதாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

11 ➤

### பாடசாலையிலிருந்து இடைவிலகிய

## சிறுவன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 25

இணுவில் கலாஜோதி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான். உரும்பிராயைச் சேர்ந்த முருகதாஸ் மனோஜ் என்ற

11 ➤

## சமூகச் செயற்பாட்டாளர் மீது வீடுபுகுந்து வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 25

சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பிவந்த வேலணை பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் மீது நேற்றுமுன்தினம் இரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

12 ➤



லம்போசிகன்



சசிகாந்தன்

### பருத்தித்துறைக் கிணற்றில்

## இளைஞர்கள் இருவர் சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உபய கதிர்காமம் பகுதியிலுள்ள தோட்டக்கிணற்றிலிருந்து இரண்டு இளைஞர்கள் சடலமாக மீட்கப்பட்டு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப் படைக்கப்பட்டுள்ளனர்.

11 ➤

## போதைப்பொருள் விழிப்புணர்வு: மதத்தலைவர்களுக்கும் பொறுப்பு!

### நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 25

இந்துக்குருக்களாகட்டும், கிறிஸ்தவ அருட்தந்தையர்களாக இருக்கட்டும் அவர்கள் உயிர் கொல்லிபோதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்

11 ➤



## இளைஞன் மீது மோதியது பஸ்

### போதையிலிருந்தாராம் சாரதி

யாழ்ப்பாணம், ஒக். 25

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தான்குளம் - வசந்தபுரம் பகுதியில் நேற்று மாலை தனியார் பேருந்து

11 ➤

### வெள்ளக்காடாகிய யாழ். நகர்

## மாநகரசபை பணியாளர்களின் துரித நடவடிக்கையால் சீரானது

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை கொட்டித் தீர்த்த கன மழையால் வெள்ளக்காடாகிய யாழ். நகரை



12 ➤

### யாழ். பல்கலையில் பகிடிவதை எதிரொலி

## 19 மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிப்பு

### தண்டனையை நீக்குவதற்கு அழுத்தமும் பிரயோகிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் துன்புறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட 19 மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத்

11 ➤

## இன்று சூரியகிரகணம்!

### யாழ்ப்பாணத்தில் வெற்றுக்கண்களால் பார்க்கலாம்

கொழும்பு, ஒக். 25

இன்று நிகழவுள்ள சூரிய கிரகணத்தை யாழ்ப்பாணத்தில் மிகத்தெளிவாகக் காணமுடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் பணிப்பாளர், பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

12 ➤

## ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 2 மடங்காக அதிகரிப்பு

### மேல் மாகாணத்தில் முதலில் நடைமுறை

கொழும்பு, ஒக். 25

தொழில்முறை பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகளுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை 5 லீற்றரில்

11 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## அருட்தந்தை மா.சக்திவேல் வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 25**



**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடூரம் காரணமாக அது நீக்கப்படவேண்டும் என்ற வலியுறுத்தல்கள் உரத்து எழ வேண்டும். அத்துடன், மிக நீண்ட காலமாக சிறை வாழ்வை அனுபவித்துவரும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.**

அவரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் தலையீட்டினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலையில் விடுதலையானோரும், அவர்களின் குடும்பத்தினரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பும் மகிழ்வதோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம் காரணமாக மிக நீண்ட காலமாகச் சிறை வாழ்வை அனுபவித்துவரும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரசியல் கைதிகளில் 8 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று ஆரம்பத் தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்தாலும் இறுதியில் நால்வர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்வதாகப் பெயர் குறிப்பிட்டுள்ள ஏனையவரையும் விடுதலைக்கான தடைகளை நீக்கி அவசரமாக விடுவிக்க ஆவன செய்திடல் வேண்டும்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் வீரக்குமார் ராகுலன் (மட்டக்களப்பு), ஜெபநேசன் (மன்னார்), ராமநாதன் நவதீபன் (மாத்தளை) மூவரும் 15 வருடங்களுக்கு மேலாக சிறை வாழ்வை அனுபவித்துள்ளதோடு சக்திவேல் இலங்கேஸ்வரன் (வவுனியா) 23 வருட சிறைவாழ்வை அனுபவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வாழ்வைப் பறித்து வாழ்வை கொலை செய்ய முடியுமே தவிர வாழ்வைக் கொடுக்க முடியாது என்பது கடந்த 43 வருட கால தமிழர்களின் அனுபவமாகும். இத்தகைய கொடூர சட்டத்துக்கு எதிராக அது கொண்டுவரப்பட்ட 1979ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் குரல் கொடுப்பதோடு, தற்போது அதன் கொடூரத்தை உணர்ந்த தெற்கின் சிங்களவர்களும் குரல் கொடுக்கின்றனர். சர்வதேச அமைப்புக்களும் குரல் கொடுக்கின்றன.

இந்தநிலையில் அதனை மாற்றுவதற்கு இன்னும் ஆட்சியாளர்கள் ஆயத்தமாக இல்லை என்பது அவர்களின் அரசியல் கொடூர முகத்தையே வெளிப்படுத்துகின்றது. இதனைப் பாதுகாப்புக் கவசமாக வைத்துக்கொண்டே அரசியல் செய்ய முனைகின்றனர். பலமான மக்கள் எதிர்ப்பே இதற்குத் தேவை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்க வேண்டும் என்பது பொதுக் கோரிக்கையாக இருக்கின்றது. அதனை ஆட்சியாளர்கள் எப்போது நீக்குவார்களோ தெரியாது. அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாகத் தங்கள் இளமையைச் சிறையில் தொலைத்துள்ளனர்.

இன நல்லிணக்கம் கருதி அமைச்சரவை, சட்டமா அதிபர் திணைக்களத்தோடு கதைத்து அரசியல் கைதிகள் மீது தொடுத்துள்ள வழக்குகளை மீளப்பெறுவதன் மூலம் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யலாம். அதனைத் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் வலியுறுத்தவேண்டும். அதுவே அரசியல் கைதிகளுக்குக் கௌரவமாக அமையும். இன நல்லிணக்கத்துக்கும் அடித்தளமாகும்' - என்றுள்ளது. (ம-22)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தீர்வின்றித் தீபாவளி கிடையாது!

## வவுனியாவில் நேற்றுப் போராட்டம்

வவுனியா, ஒக். 25

காணாமலாக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்குத் தீர்வு இல்லாமல் எமக்குத் தீபாவளிப் பண்டிகை இல்லை - இவ்வாறு வவுனியாவில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் பொதுவாக்கெடுப்பே நல்லதொரு தீர்வைத்தரும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். (ம-110)





## கடலட்டைப் பண்ணைக்கு எதிராக

# கிராஞ்சியில் தொடர்கிறது 25ஆவது நாள் போராட்டம்

கிளிநொச்சி, ஒக். 25

பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட இலவன்குடா -கிராஞ்சி பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைக்கு எதிராக அந்தப்பகுதி மீனவ சமூகங்களால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 25ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்ட கிராஞ்சி - இலவன்குடா மக்கள் தெரிவிக்கையில்;

இலவன்குடா - கிராஞ்சி கடற் கரை ஓரம் முழுவதும் சட்ட விரோதமாக கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துமீறிய கடலட்டைப் பண்ணை அமைப்பதால் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 45 வருடங்களுக்கு மேலாக பாரம்பரியமாக சிறகுவலை மீன்பிடி தொழில் செய்துவரும் 60 வரையான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயம் ஆகியோருக்கு பலமுறை கடிதம் மூலமாக அறிவித்திருந்தோம். ஆனால், இதற்கான சரியான தீர்வு கிடைக்கவில்லை. அதற்கு மாறாக மேலும் பல அட்டைப்பண்ணைகள் பாரம்பரிய தொழில் புரியும் இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் படகுகள், சிறுவள்ளங்கள் சென்று தரித்து நிற்கும் துறைமுகப் பகுதிக்குள் அட்டைப்பண்ணை அமைக்கப்பட்டு கடற்போக்குவரத்துக்கு பெரிதும் இடையூறாக அமைந்துள்ளது. எனவே துறைசார் அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்- என்றனர். (ம-14,213)


# வெடிபொருள்கள் பூநகரியில் மீட்பு!



கிளிநொச்சி, ஒக். 25

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கிளைமோர் வெடி பொருள்கள் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டன.

மட்டுவால் நாடு நெட்புலவுப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் துப்புரவுப் பணி மேற்கொண்டபோது சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று காணப்பட்டது. அதனையடுத்து காணி உரிமையாளர் பூநகரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். தகவலுக்கமைய காணிக்கு விரைந்த பொலிஸார், பொதியில் கிளைமோர் வெடிபொருள்கள் மற்றும் வயர்கள் காணப்பட்டதை அவதானித்தனர். அதன்பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனுமதியைப் பெற்று வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டனர். (ம-14,113)




# அரசியல்தீர்வை வலியுறுத்தி வள்ளிபுனத்திலும் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஒக். 25

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் 100 நாள்கள் செயற்றிட்டத்தின், 84 ஆவது நாள் கவனவீர்ப்புப் போராட்டம், புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் சுயஅரசியல் தீர்வு வேண்டும்', 'வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்', 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்', 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம்', 'எமது மதத் தலங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே', 'இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுவீகரிக்காதே' உள்ளிட்ட பல வலியுறுத்தல்களை முன்வைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-14,213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்று காரணிகளுக்காகவே 22 இனை ஐ.ம.ச. ஆதரித்தது

*திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 25

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை இரண்டரை வருடங்களுக்கு நீடித்தல், இரட்டைக் குடியுரிமையை நீக்குதல் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுதல் ஆகிய மூன்று முக்கிய காரணங்களுக்காகவே ஐக்கிய மக்கள் சக்தி 22ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தி 22 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கியமைக்கு பிரதான காரணம் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தினை விட தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தம் ஓரளவு ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது. மேலும் 22 ஆவது திருத்தத்தில் குறிப்பாக சில முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை இரண்டரை வருடங்களுக்கு நீடித்தல், இரட்டைக் குடியுரிமையை நீக்குதல் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுதல் ஆகிய மூன்று முக்கிய காரணங்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தி 22ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது

அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக இந்த நாட்டில் கஞ்சா பயிரிடுவதை சட்ட பூர்வமாக்குவது நாட்டின் கலாசாரத்துக்குச் சிறிதும் பொருந்தாது. நாட்டை வலுப்படுத்தும் நோக்கில் கஞ்சா செய்கையை சட்ட பூர்வமாக்குவதில் ஐக்கிய மக்கள் சக்திக்கு உடன்பாடு இல்லை. பணம் சம்பாதிப்பதற்காகவும், அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் நாட்டின் கலாசாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது - என்றார். (ம)

# இரட்டைக் குடியுரிமையை எதற்கு எதிர்க்கவேண்டும்?

## கஜேந்திரகுமார் கேள்வி

வவுனியா, ஒக். 25

**தமிழ்த் தேசம் எனப் பேசுகின்றபோது தாயகத்தில் இருக்கின்ற சனத்தொகையுடன், புலம்பெயர் தமிழ் மக்களும் அதன் ஓர் அங்கம். அவர்களைப் பாதிக்கும் இரட்டைக் குடியுரிமை தடைத்தீர்மானத்தை நாம் ஏன் ஏற்கவேண்டும்? 22 ஆவது திருத்தம் என்பது ஆட்சியில் உள்ள கள்ளக் கூட்டம் தம்மை ஜனநாயகவாதிகள் எனக் காட்ட எடுத்த ஒரு நாடகமாகும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

வவுனியா ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

22ஆவது திருத்தம் என்ற பெயரில் 21 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டு நிவைவேற்றப்பட்டுள்ளது. குறித்த விவாதத்தில், இந்தத் திருத்தத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாங்கள் எங்களுடைய ஆதரவைத் தரமுடியாது என்று பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டு வாக்கெடுப்பின்போது வெளிநடப்புச் செய்திருந்தோம்.

எங்களது நியாயப்பாடுகளை நாங்கள் பகிரங்கமாகப் பதிவு செய்திருந்தோம். இது தொடர்பில் பொது மக்களுக்குச் சொல்லப்படுகின்ற காரணங்கள் நடைபெற்று இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். முதலாவதாக நாட்டு மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் அதாவது அடிப்படையிலேயே அதனை மாற்றம்வேண்டும் எனப் போராடி இருந்த பின்னணியில் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களைக் கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டிதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர



முயற்சித்தார்கள். திருத்தம் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றதன் பின் எடுத்துப் பார்த்தால் ஜனாதிபதியினுடைய ஓர் அதிகாரத்தையும் அவர்கள் குறைக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவே இருக்கின்ற நிலையில், அதில் இருந்து அதிகாரத்தைக் குறைத்ததாக எதுவுமே இல்லை என்பது தான் எங்களுடைய முதலாவது வாதம்.

இரண்டாவதாக ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்தும் கோணத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனால், அந்த ஆணைக்குழுக்களைப் பார்க்கும் போது அதனை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கையில்தான் இருக்கின்றது. அதாவது ஜனாதிபதி விரும்பாவிட்டால் ஆணைக்குழுக்கள் சிபார்சு செய்தாலும் நியமிக்கப்படாமல் இருக்கும். எனவே, நியமிப்பது ஜனாதிபதியின் கையில்தான் இருக்கின்றது. அதுமட்டுமல்லாது,

அந்த ஆணைக்குழுக்களை நியமித்தாலும் கூட அரசு தரப்புக்குப் பெரும்பான்மை இருக்கும் வகையில்தான் அது தயாரிக்கப்பட்டுள்ளது. அப்படியெனில் சுயாதீனம் எங்கே இருக்கின்றது?

மூன்றாவதாக இரட்டைப் பிரஜாவுரிமை தடை அமுல் என்று சொன்னார்கள். தமிழ்த் தேசத்தின் அரைவாசி சனத்தொகை மேற்கு நாடுகளிலும், வெளிநாடுகளிலும்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விரும்பிப் போகவில்லை. இங்கு வாழ முடியாதபடி திட்டமிட்டுத் துரத்தினார்கள். தமிழ்த் தேசம் எனப் பேசுகின்ற போது தாயகத்தில் இருக்கின்ற சனத்தொகையுடன், புலம்பெயர் தமிழ் மக்களும் அதன் ஓர் அங்கம். நீங்கள் செய்த அநியாயத்தால், நீங்கள் கொள்ளையடிக்கக் கள்ளரை நியமித்தால் நாங்கள் ஏன் பாதிக்கப்படவேண்டும்? எங்கள் தேசம் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான தீர்மானம் எங்களது புலம்பெயர் உறவுகளைப் பாதிக்கும். அதனை நாம் ஏன் ஏற்க வேண்டும்? எங்களைப் பொறுத்தவரை இந்தத் திருத்தம் என்பது முழுக்க முழுக்க போலிக் காரணத்தைக் காட்டி எந்தவித அங்கீகாரமும் இல்லாது, ஆட்சியில் உள்ள கள்ளக் கூட்டம் நிறைவேற்றியுள்ளது - என்றார். (ம-22)

# எம்.பி. பதவியை இழக்கும் 10 பேர்

கொழும்பு, ஒக். 25

22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அடுத்து இரட்டை பிரஜாவுரிமை பெற்ற 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை இழக்கவுள்ளனர்.

அவர்களை கௌரவமான முறையில் பதவி விலக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், 43 ஆவது படையணியின் தலைவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அரசில் உயர்மட்டப் பதவிகளை வகித்து வரும் இரட்டை பிரஜாவுரிமை பெற்றவர்களையும் பதவிகளில் இருந்து விலக்கும் தீர்மானத்தை எடுக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ)

# பெரமுனவுடனான உறவு பலப்படும்

*சீனா தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 25

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுனவுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கு ஆர்வம் கொண்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன கம்யுனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக ஜி ஜின்பிங் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து முன்னாள் பிரதமர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதை தொடர்ந்தே இலங்கைக்கான சீனத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

சீன கம்யுனிஸ்ட் கட்சி பொதுஜன கட்சி ஆகியவற்றிற்கு இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு ஆர்வமாக உள்ளோம் என சீன தூதரகம் தனது ருவிற்றர் செய்தியில் தெரிவித்துள்ளது. (ம)

# '22' மூலம் ஜனநாயகம் உறுதிசெய்யப்பட்டுள்ளது

நாட்டின் முழு அதிகாரமும் தனிநபர் மீது குவிக்கப்பட்டு சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு வந்த தரப்பினரை கட்டுப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் மீண்டும் உறுதிசெய்யப்படவும் 22 ஆவது திருத்தம் வழிகோலியுள்ளது என முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றக்கூடாது என பதில் பொதுஜன பெரமுனவின் மிக முக்கியமான புள்ளிகள் தீர்க்கமான முடிவில் இருந்தனர். எனினும் முன்னாள் அமைச்சர் பஸிலை எதிர்ப்பவர்கள் மற்றும் ராஜபக்ச அரசுக்கு எதிராகச் செயற்படும் குழு வினர் ஒன்றிணைந்து எவ்வாறாவது இரட்டை பிரஜாவுரிமை முறைமையை இல்லாது செய்து அவருடைய அரசியல் வரவுக்கு முற்றுப்புள்ளிவைத்திருக்கிறார்கள். ராஜபக்ச அரசாங்கத்தின் அரசியல் பயணம் ஆட்டம் கண்டுவிட்டது. இதனைப் பலரும் பல தடவைகள் கூறியும் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 22 நிறைவேற்றப்பட்டமை நாடாளுமன்றத்தில் வீறாப்புடன் இருந்தவர்களுக்கு தக்க பதிலடியாகும். மேலும் அவர்களை எதிர்த்து அவர்களுக்கு எதிராக பலரும் வாக்களித்துள்ளனர் என்பது எதிர்காலத்தில் அவர்களுடைய இருப்பின் மீதான அரசியல் நம்பிக்கையை வலுவிழக்கச் செய்துள்ளது - என்றார். (ம)

# இரட்டைக் குடியுரிமை முடிவு நீதிமன்றத்திடம்

*தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 25

இரட்டைக் குடியுரிமை தொடர்பான முடிவுகளை நீதிமன்றத் தீர்மானங்கள் மூலம் மட்டுமே எடுக்க முடியும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

புதிதாக நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தின் கீழ் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் இரட்டைக் குடியுரிமை உள்ளவரா? இல்லையா? என்பது குறித்து உடனடியாக முடிவெடுக்க முடியாது என்று கூறியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, அத்தகைய நபர்கள் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும்போது இரட்டைக் குடியுரிமை வைத்திருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் எனவும் அவ்வாறான வேட்பாளர்கள் இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்கினால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இராணுவத்தினது கொக்குவில் படுகொலை!

## 35ஆவது நினைவேந்தல் நேற்று

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட படுகொலையின் 35ஆவது நினைவேந்தல், கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.**

கடந்த 1987ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பல மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்தனர். அந்த வழியாக வாகனங்களில் பயணித்த இந்தியப் படையினர், பாடசாலைக் கட்டடங்கள் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



-இவ்வாறு உயிர்நீத்தவர்களுக்கே உயிரிழந்தவர்களின் உறவினர்களாலும், அந்தப் பகுதி மக்களாலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-14-20-27)

# வழிப்பறியில் ஈடுபட முயன்ற சிப்பாய்க்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஒக். 25

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளுவர்புரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வழிப்பறியில் ஈடுபட முயன்ற இராணுவச் சிப்பாயை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வள்ளுவர்புரம் பகுதியில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியிடம், மோட்டார் சைக்கிளில் சிவில் உடையில் வருகை தந்த மயிலிட்டி இராணுவச் சிற்றுண்டிச்சாலையில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் சங்கிலியை அறுத்தவேளை பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். இதனையடுத்து பலாலி பொலிஸார் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் நீதிமன்று எதிர்வரும் 28ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (ம-125)

# ஹெரோய்ன் நுகர்ந்த இளைஞர் கைதானார்

## மல்லாகத்தில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக். 25

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியில் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை நுகர்ந்த குற்றச்சாட்டில் 22 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-27)

# கத்தி வெட்டுக்குள்ளான கணவன், மனைவி மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஒக். 25

கணவன், மனைவி ஒருவருக்கொருவர் கத்தியால் வெட்டித் தாக்கியதில் இருவரும் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குடும்பப் பிரச்சினை வாய்த் தர்க்கமாக மாறியதில் கணவன், மனைவியைக் கத்தியால் வெட்டியுள்ளார். அதே கத்தியைப் பறித்து மனைவியும் கணவனை வெட்டியுள்ளார்.

இருவரும் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-27)

# மோட்டர் திருட்டு!

சாவகச்சேரி, ஒக். 25

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் இருந்த நீரிறைக்கும் மின் மோட்டர் இனந்தெரியாத நபர்களால் கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 50 ஆயிரம் ரூபா என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, அன்றையதினம் இரவுவேளை நாவற்குழி நெணியன் வைரவர் ஆலயத்தின் கதவுகள் சேதப்படுத்தப்பட்டு பூட்டுகள் அனைத்தும் உடைத்தெறியப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் நாவற்குழிப் பகுதியில் உள்ள ஆலயங்களில் திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் பொலிஸார் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-14-159)

# பூசகர் வீட்டில் திருட்டு: சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 25

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கோயிலின் பூசகர் தங்கும் வீட்டில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கோயிலின் பூசகர் தங்கும் வீடு இதுவரை காலமும் மூடப்பட்டிருந்தது. அண்மையில் கோயில் நிர்வாக சபையினர், பூசகரின் வீட்டைத் திறந்து பார்வையிட்டபோது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான கண்ணாடி மற்றும் மின்னியல் சாதனங்கள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது.

அதனையடுத்து ஆலய நிர்வாக சபையால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்றுறை பொலிஸார், தமக்குக் கிடைத்த தகவலுக்கமைய அதே பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட இளைஞரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் திருடப்பட்ட சில பொருள்கள் கசூரினாவிலுள்ள இரு வியாபார நிலையங்களில் விற்கப்பட்டிருப்பது தெரியவந்தது. ஏனையபொருள்கள் இளைஞரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-125)

# சமுர்த்திக் கொடுப்பனவு 3 மாதங்களாக நிறுத்தம்!

## கச்சாய் பாலாவி மக்கள் தெரிவிப்பு சமுர்த்தி முகாமையாளர் மறுப்பு

சாவகச்சேரி, ஒக். 25

கச்சாய் பாலாவி ஜே/325 கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த சமுர்த்தி பெறும் குடும்பங்களின் சமுர்த்திக் கொடுப்பனவு 3 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்,

சமுர்த்தி வங்கியில் கடன்பெற்ற சமுர்த்திப் பயனாளிகள் கடன் தொகையை மாதாந்தம் செலுத்தாததால் அவர்களின் கடன் நிலுவையை செலுத்தி முடிக்கும்வரை சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க முடியாது என்று கூறி 3 மாதங்கள் தமக்கு சமுர்த்திக் கொடுப்பனவை கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் வழங்கவில்லை. கடன் பெற்றவர்கள் மற்றும் அவர்களுக்குப் பிணை நின்றவர்களின் கொடுப்பனவை நிறுத்தலாம். கடன் பெறாதவர்களின் கொடுப்பனவை ஏன் மூன்று மாதங்களாக நிறுத்த வேண்டும்?

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சமுர்த்தி பெறும் குடும்பங்களாகிய நாம் அன்றாடச் செலவுக்கு மிகுந்த சிரமப்படுகின்றோம். உடனடியாக எமக்குரிய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர்.

இது தொடர்பாக கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளரிடம் தொடர்புகொண்டபோது, கடன் பெற்ற சமுர்த்திப் பயனாளிகளில் 80 வீதமானவர்கள் ஒழுங்கான முறையில் கடனைத் திருப்பி செலுத்தவில்லை.

இதன் காரணமாக கடன்பெற்ற சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் பிணை நின்றவர்களின் கொடுப்பனவுகள் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்டது. மற்றவர்களின் கொடுப்பனவுகள் தொடர்ந்து வழங்கப்படுகிறது. கடன் தொகையை மீளச் செலுத்தியவர்களுக்குரிய கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது - என்றார் (ம-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"மற்றவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முயற்சிப் பதே மிகவும் மதிப்புமிக்க விடயம்"

- றொபேர்ட் பேடன் பவல்

## மழைக்காலம் அவதானம்!

யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் மாகாணத்தி லும் டெங்கின்தாக்கம் மிகத்தீவிரமாகியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 22 பேரும், செப்ரெம்பரில் 37 பேரும் டெங்குத் தொற் றுக்கு உட்பட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டுமல்ல, வடக்கின் அநேக மாவட்ட மருத்துவமனைகள், பிரதேச மருத்துவமனைகள் என்பவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் டெங்குத் தொற்றுத் தொடர்பான தரவுகள் ஆரோக்கியமானவை அல்ல. இந்த மழைக்காலம் வழக்கமான மழைக் காலங்களை விடவும் ஆபத்தானது என்ற செய்தி யைத்தான் அந்தத் தரவுகள் கட்டியம் செய்கின்றன.

டெங்கு, வைரஸ்காய்ச்சல் என்பனகாரணமாக அன்றா டம் பல நூற்றுக் கணக்கானவர்கள் வடக்கிலுள்ள பல மருத்துவமனைகளையும் நாடிக் கொண்டிருக் கின்றனர். நாட்டின் பொருளாதாரச் சிதிலம் மருத்து வத்துறையை பெரும் சவாலுக்குள் தள்ளியுள்ளது. மருந்துகள் – மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப் பாடென்பது கடந்த சில வாரங்களாகவே எழுதப்படாத விதியாகிவிட்ட நிலையில் இந்த மருத்துவ நெருக் கடி மற்றொரு கோணத்தில் வியாபிக்க வாய்ப்பிருப் பதைத்தான் டெங்குத் தொற்றுத் தொடர்பான மாவட்ட – மாகாண தேசிய தரவுகளும் பறைசாற்றுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நிலவும் மக்கள் நெருக்கம், சுகா தாரமற்ற பொதுச்சூழல், மாறிப்போன உணவு முறைகள், பெருகி வரும் நோய்கள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வரும் நிலை, மக்கள் நெருக்கத்தால் மாசுபடும் சுற்றுச்சூழல், தேங் கும் தண்ணீர் போன்றவற்றால் மழைக்காலம் என் றாலே ஒருவித எரிச்சல் தோன்றிவிடுகிறது. 'இன் றும் மழை பெய்யுமாம்' என்ற தகவல் கூட மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் அளவுக்கு நாம் வாழும் சூழல் மாறிப்போய்விட்டது. இதன் பிரதி பலிப்பே இன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையிலும் மாவட்ட மற்றும் பிரதேச மருத்துவ மனைகளிலும் எதிரொலிக்கின்றது.

கொரோனா என்பது எவ்வளவு பாரதூரமான உயிர் கொல்லி நோயோ, டெங்கின் ஆபத்தும் அதற்கு இம்மியும் குறைந்தது அல்ல. ஆதலால், குழந்தை கள், சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்பு சக் தியை அதிகம் கொண்டிராதவர்கள் பொதுவெளி களில் அதிகம் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டியது தற்போது அவர்களின் கடமையும் காலத்தின் தேவையுமாகும். பலவித நோய்களுடன் பலநூறு நோயாளர்கள் மருத்துவமனை வளாகத்துக்குள் தினம்தினம் சென்று திரும்புகின்றனர். பல்வேறு சூழலியல்களுடன் அவர்கள் தொடர்புறுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மருத்துவமனை யின் வளாகத்துக்குள் சிறுவர்கள், குழந்தைகளை தேவையற்ற விதமாக அழைத்துச் செல்வதை முற் றாகத் தவிர்த்தல் நலம்.

மருத்துவமனையின் விடுதிகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீர் அதி கரிப்புக் கண்டுள்ளது. இதனால் அவர்களைப் பார்க்க வரும் பொதுமக்களின் எண்ணிக்கையும் சடுதியா கவே அதிகரித்துள்ளது. இவ்வாறாக நோயாளர் களைப் பார்க்கவரும் மக்கள் உரிய பாதுகாப்பு முன் னேற்பாடுகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல உங்களின் குடும் பத்தின் ஆரோக்கியத்துக்கும், உங்களின் சமூகம்சார் ஆரோக்கியத்துக்கும் நீங்களே பொறுப்பாளிகள். சுற்றுப்புறச் சூழல் துப்புரவுமுதல் அன்றாடக் கட மைத்தளங்கள் வரையில் அனைத்திலும் பொறுப் புணர்ந்து செயற்படுங்கள். அதுவொன்றுதான் இப் போதைக்கு எம் இருப்பு.



## நாட்டை வங்குரோத்தில் தள்ள மீண்டும் முயற்சி!

### சஜித் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக். 25**

**வங்குரோத்துக்குள்ளான நாட்டை மேலும் வங்குரோத்தான நிலைக்குத் தள்ள ஆட் சியாளர்கள் முயல்வது தேசிய அவலமாகும். எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் முறை யான ஒப்பந்தத்தை அரசு மேற்கொள்ள வேண் டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- "நாட்டில் பணவீக்கம், வாழ்க்கைச் சுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு, பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக் கின்றது. ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அவ திப்பட்டு வருகின்றனர். இவ்வாறான நிலை யில் அரசு பொருளாதாரத்தையும், தேவை களையும் சுருங்கச் செய்கின்றது. பொருளா தாரத்தையும் தேவையையும் அழித்து, மக் களின் வாழ்வாதாரத்தையும் அழித்து வங்கு ரோத்து நிலையிலிருந்து வெளிவர அரசு முயல்கின்றது. அது தவறான செயலாகும். 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் 2போர்கள் இடம்பெற்றபோதும் எவருக்கும் தலைசாய்க்காது தைரியத்துடன் சர்வதேச உறவுகளைச் சரியாகப் பயன்படுத்தி நாட் டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட் டது. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வங்குரோத்துக்குள்ளான நாட்டை மேலும் வங்குரோத்தான நிலைக்குத் தள்ள ஆட்சியா ளர்கள் முயல்வது தேசிய அவலமாகும். பொல ரைக் கொண்டு வரும் சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கு வரி விதிக்கப்ப டுகின்றது. தற்போதைய அரசின் நரம்பு மண்டலம் சரியாக வேலை செய்யாது குழப்பம் நிறைந்த தாக இருக்கின்றது"- என்றார். (ம-22)

## பொருளாதார நெருக்கடியால் 4 பேர் தமிழகத்தில் தஞ்சம்

சென்னை, ஒக். 25

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளா தார நெருக்கடி காரணமாக, ஒரே குடும்பத் தைச் சேர்ந்த நான்கு பேர் தமிழகத்தில் தஞ் சமடைந்துள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த குடும்ப மொன்றே இவ்வாறு தமிழகத்துக்குச் சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளது. கணவன், மனைவி மற்றும் அவர்களின் இரண்டு பிள் ளைகள் ஆகியோரே இவ்வாறு தமிழகத்துக் குச் சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளனர். அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட நூற் றுக்கணக்கானோர் படகுமூலம் இந்தியாவுக் குச் சென்று அங்கு தஞ்சமடைந்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-27)

நாளை 26.10.2022 புதன்கிழமை ஐப்பசி 9

சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம்: 12.03 - 01.33

ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் புனிதப் பிரதேசமாக கோணேச்சரத்தை அங்கீகரிக்குக!

## வலி.தென்மேற்கு பிரதேசசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**உலகளாவிய தமிழ்மக்களின் புனித பிரதேசமாக திருக்கோணேச்சரத்தை அடையாளப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்து வலி.தென்மேற்கு பிரதேசசபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'அண்மைக்காலமாக தமிழர்களினுடைய பூர்வீக நிலங்கள் அரசால் திட்டமிட்டபடி சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகவும் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்ற திருக்கோணேச்சரர் ஆலயத்துக்கு எதிரான தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். திருகோணமலை மாவட்ட, இலங்கை வாழ் தமிழ் சைவர்களின் உணர்வு மதிக்கப்படவேண்டும். குருந்தூர்மலையில் இடம்பெற்றதைப் போன்றே சட்டவிரோத அடாவடித்தனங்கள் திருக்கோணேச்சரர் ஆலயத்துக்கு எதிராக அதிகரிக்கப்படுகின்றது.

ஆகவே, திருக்கோணச்சரத்தை உலகளாவிய தமிழ் மக்களின் அடையாளமாக பிரகடனப்படுத்த வேண்டும்' எனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையே உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்று தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ம-14-125)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 25

1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் 56ஆவது ஆண்டு நினைவாக பகிரங்க கருத்தரங்கு, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் 'இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் வெகுஜன எழுச்சியின் அனுபவங்களும்' எனும் தலைப்பில் இந்தக் கருத்தரங்கு இடம் பெற்றது. (ம-14-20)

## நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

வடமாகாணம் உள்ளிட்ட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று பரவலாகக் கடும் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதனைவிட நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அத்துடன் கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு அல்லது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன், அக்கடல் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்புடன் காணப்படும்.

எனவே, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)



தீபாவளித் திருநாளான நேற்று மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர். ஆலயங்களில் தீபாவளியை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றன.. யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அதிகளவான மக்கள் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலயச் சூழலில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (எ-27-20)



யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை முதல் கடும் மழை கொட்டித் தீர்த்ததால் தீபாவளிக் கொண்டாட்டங்கள் சோபை யிழந்தன.

தீபாவளித் தினத்தில் புத்தாடை அணிந்து மக்கள் ஆலயங்களுக்கும், உறவினர்கள் வீடுகளுக்கும் செல்வது வழமை யாகும்.

ஆனால், நேற்று யாழ்ப்பாணத்தில் கொட்டித் தீர்த்த பெருமழையால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (எ-27)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கவலைகள் மறையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நிதி முன்னேற்றம் ஏற்படும். ஆரோக்கியம் பற்றிய கவலை தீரும். பெற்றோர் உடல்நலனில் இருந்த சிரமங்கள் குறையும்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உண்டாகும். தேவையின்றி யாரையும் பகைத்துக்கொள்ள வேண்டாம். குடும்பத்தில் புதிய உறவுகள் வர வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** கவலைகள் தீரும். சிலருக்கு காதல் உணர்வு அதிகரிக்கும். பேசும் போது கவனம் தேவை. முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பணியிடக் கவலை தீரும்.

**கடகம்:** வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பெரியவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். கலகலப்பான நாள். பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். அமைதியான நாள்.

**சிம்மம்:** கடந்த கால வருத்தங்களை நினைக்காமல் அவற்றை விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியான நாள். எதையும் ஆராயாமல் ஏற்க வேண்டாம். உறவுகளைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** யோகமான நாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிதி நிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். பகையொன்று நட்பாகும். வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும்.

**துலாம்:** நேற்றிருந்த கவலை ஒன்று முற்றிலும் தீரும். நட்பு வளரும். வாக்குவாதத்தால் தொல்லை வராதபடி கவனமாக இருங்கள். வீட்டில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சிகளை எடுப்பீர்கள். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருச்சிகம்:** பணியாளர்கள் பின் விளைவுகளை அறிந்து செயற்படுவது நல்லது. புதிதாக அறிமுகமாகும் நபர்களால் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியான நாள். உங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கும்..

**தனுசு:** நல்லவர்களை பகைத்துக் கொள்வது தப்பு என்பதை உணர்வீர்கள். நீங்கள் எண்ணிய விஷயங்கள் இன்று சிறப்பாக நடைபெறும். பொறுப்பு ஒன்றை நல்ல முறையில் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.


**மகரம்:** குடும்ப விஷயங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மனநிம்மதி கூடும். குடும்ப சச்சரவில் அமைதி தேவை. நெருக்கமானவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** குழந்தைகளின் வாழ்வில் செழிப்பான மாற்றம் உண்டு. மற்றவர்களின் மனம் நோகக்கூடாது என்ற கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்டம் உங்களை திக்குமுக்காட வைக்கும். கலகலப்பான நாள்.

**மீனம்:** குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று இன்று நடக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சகோதரர்களின் மூலம் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் ஒருவரின் சிறப்பு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 15 • 10 • 1978

மறைவு 07 • 11 • 2018

சிவன்கோவிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் செல்லத்துரை மயூதரன்

(உரிமையாளர் சிவசக்தி அரைக்கும் ஆலை & பல்பொருள் வாணிபம்)

திதி: ஐப்பசி அமாவாசை (25.10.2022)


எங்கள் கடைசி சொத்து மயூவே!
மயூ உன் கடைமை பார்ப்பதற்கா
எங்களை விட்டுச் சென்றாய்
காலம் கடந்து ஆண்டுகள் நான்கு ஆனாலும்
எம் இதய வான்பரப்பில் ஒளி வீசும்
துருவ நட்சத்திரம் நீ !
நீ வரமாட்டாய் என தெரிந்தும்
சுமக்கின்றோம் சுமப்போம் உன் நினைவுகளை!
அடுத்த ஜென்மம் உண்டெனில் எம்முடன்
இணைந்திட வேண்டுகின்றோம்

இல. 19, தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

உன் ஆத்ம சாந்தி அமைதிக்காக
அப்பா, அம்மா, மகன்,
சகோதரர்கள்.

(cs36291) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 • 01 • 1994

மறைவு 04 • 11 • 2021

### அமரர் இந்திரன் பிரகலாதன்

திதி: 25.10.2022

ஆண்டு ஒன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள்
- திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

வராகி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்
சகோதரர்கள்.

(cs 21353) (2.6)

## மரண அறிவித்தல்



மலர்வு • 15 • 06 • 1950

உதிர்வு • 24 • 10 • 2022

### திருமதி இரத்தினம் இந்திராணி

கந்தையா உபாத்தியார் வீதி, கந்தரோடையை பிறப்பிடமாகவும் ஈஞ்சடி உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இந்திராணி அவர்கள் நேற்று (24.10.2022) திங்கட்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நெல்லியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், செல்வேஸ்வரி, தங்கேஸ்வரி, ஈஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தராசா, சுகுமார், பாமினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிந்துஜன், கிரூஜன், கிரிதரன் கிரிஷா, சதீஸ்குமார் சிந்துஜா (இத்தாலி), ஆனந்தவிஷ்ணு, சாருஜன், தரணியா, பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, சுந்தரலிங்கம், சந்திராணி, காலஞ்சென்ற லோகநாதன், லோகேஸ்வரி, விஜயகுமார், ஜெயக்குமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கமலாதேவி, காலஞ்சென்ற பூபாலராசா, கேதாரகௌரி, கணேசன், சாருதாதேவி, காலஞ்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரினதும் மற்றும் காலஞ்சென்றவர்களான நல்லையா, அரியநாயகம் ஆகியோரினதும் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஞ்சடி, உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 • 02 • 1956

மறைவு 23 • 10 • 2022

### சண்முகலிங்கம் சறோஜினிதேவி

தொண்டமனாறை பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகலிங்கம் சறோஜினிதேவி நேற்றுமுன்தினம் (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், நா.சண்முகலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சர்மிலா (London), சுபேஸ் (London), பபிதா, சுதன் (Switzerland) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாகரன் (London), நிஷாந்தினி (London), தர்சினி (Switzerland) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிதுஷிகா, லக்சித், றகீஷா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.10.2022) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மாயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
1. சின்னராசா : 076 222 7321
2. லோகநாதன் : 076 2183 898

தகவல்
குடும்பத்தினர்

(cs.47256) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யா / யூனியன் கல்லூரி 96 A / L பழைய மாணவி

**திருமதி சர்மிலா சுபாகரன்**

அவர்களின் பாசமிகுத் தாயார்

## திருமதி சறோஜினிதேவி சண்முகலிங்கம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**பிரிவுத் துயர் பகிரும்**

**யா/ யூனியன் கல்லூரி நண்பர்கள் குழு (96 உயர்தரம்)**

(cs 21354) (2.6)

---

**MINISTRY OF URBAN DEVELOPMENT & HOUSING**

**DEPARTMENT OF BUILDINGS**

**INVITATION FOR BIDS**

## Balance Work of Construction of Four Storied Building for District Election Office at Jaffna-Stage I [Contract No: RPC/CE(Z2)-04/22 ]

1. **The Chairman, Regional Procurement Committee (Zone 02),** on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for "Balance Work of Construction of Four Storied Building for District Election Office at Jaffna-Stage I" as described below and estimated to cost **Rs.12.6million.**

   The construction period is **120 Days.**

2. **Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).** *Since the Estimated Value of Work to be performed under this procurement is below Rs. 50 Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(iii) & 03/2020.*

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade **C6 or C5** with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
   *"The bidders shall also register themselves with Registrar of Public Contracts, Sri Lanka, in term of the Public Contracts Act No. 03 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate"*

4. Interested bidders may obtain further information from the **Chief Engineer** (Zone 2), **Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
   Contact numbers are: Phone: 021-2222781 Facsimile: 021-2222781

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna from **26-10-2022** until **09-11-2022** from 9:00hrs to 15:00 hrs upon payment of a non refundable fee of Rupees four thousand (**Rs.4,000/-**).

6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Chief Engineer** (Zone 2), **Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** to reach on or before **10:00 hrs on 10-11-2022.** Bids will be opened soon after closing at the same address in presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be valid for a period of 77 Days from the last date fixed for receiving of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of Director General of Buildings
   - for an amount of Rs. **189,000.00**
   - valid up to 22nd February 2023
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**Eng. G.R.S.B.Gamlath**
**Director Construction (Region 2)**
**Department of Buildings,**
**2nd Floor,"Sethsiripaya",**
**Battaramulla.**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.05.1931 | 25.09.2022 |

## அமரர் தம்பு சுப்பிரமணியம்

**திதி:-சதுர்த்தசி (25.10.2022)**

அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
புவிதனில் எம்மைப் புகழுடன் வாழ வைத்த
எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**429, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

---

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்** • 30 • 03 • 1949



**ஆண்டவன் அடியில்** • 22 • 10 • 2022

## திருமதி தங்கவேலு கமலராணி

சந்தை வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிடாரி அம்மன் கோயிலடி, ஆனைக்கோட்டையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கவேலு கமலராணி கடந்த (22.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை இராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், செல்லையா தங்கவேலு அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் ஒட்டுமடம் இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (26.10.2022) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் செய்யப்பட்ட பின் தகனக் கிரியை களுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிடாரி அம்மன் கோவிலடி,**
**ஆனைக்கோட்டை.**
**ராஜ் :- 0014165549613**
**மஞ்சு (மணி) :- 004571354049**
**கோபி :- 004571354048**
**[illegible] :- 077 015 0368**

**தகவல்:**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 21358) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக நடைமுறைக்கு மேலும் நான்கு வரிகள்!

## நவம்பர் முதல் விதிக்கப்படலாம்

**கொழும்பு, ஒக்.25**

**அரச வருவாயை அதிகரிப்பதற்காக மேலும் 4 வரிகளை அரசாங்கம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது என்று நிதி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

காணி வரி, சொத்து வரி உள்ளிட்ட 4 வரிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இந்த வரிகளின் சதவீதங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை, ஆனால், நவம்பர் மாதம் முதல் இந்த 4 வரிகளும் விதிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது அரசாங்கத்துக்கு கிடைக்கும் ஆண்டு நேரடி வரி வருவாயை அதிகரிக்க வேண்டும் என உலக வங்கி போன்ற சர்வதேச ஆதரவு அமைப்புகள் பரிந்துரை செய்துள்ளன.

2022ஆம் ஆண்டில் அரசாங்க வருமானமாக கருதப்படும் 2 ஆயிரத்து 56 பில்லியன் ரூபாவை 2023ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 500 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்று அந்த ஆதரவு நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு கடுமையாகப் பரிந்துரைத்துள்ளன.

அந்தப் பரிந்துரைகளுக்கமைய, புதிய வரிகள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)



# காரைநகர் அபிவிருத்தி தொடர்பில் உரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 25

காரைநகர் பிரதேசத்தில் எதிர்காலத்தில் செய்யப்படவேண்டிய முக்கியமான அபிவிருத்திப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல், பிரதேசசபையின் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது காரைநகர் பிரதேசத்தின் பல அபிவிருத்தித் திட்டங்கள் தவிசாளரால் சுட்டிக்காட்டப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளும் காரைநகர் பிரதேசசபையின் ஐவர் அடங்கிய குழுவினரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-14,125)


## தேவை

பில்கிளாக். பொதியிடல். உதவியாளர். மாவறுத்தல் அனுபவம் உள்ளவர் (சம்பளம் - 1200/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு:-பிருந்தா அரைக்கும் ஆலை
179. சிவன்பண்ணை வீதி. யாழ்ப்பாணம்.
Tele:077 174 6101


# பஸிலை ஓரங்கட்டும் ராஜபக்ச குடும்பம்!

## அவசரமாக நாடு திரும்பும் பஸில்

கொழும்பு, ஒக். 25

பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராவது தொடர்பாகவோ முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்ற 22ஆவது திருத்தச் சட்டத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 22ஆவது அரசமைப்பு திருத்தம் காரணமாக ராஜபக்ச குடும்பத்துக்குள் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமாயின் இரட்டைப் பிரஜாவுரிமையை கோத்தாபய ராஜபக்சவை போன்று இரத்துச் செய்யவேண்டும் என பஸில் ராஜபக்சவுக்கு எதிராக சமல் ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்து குடும்பத்துக்குள் கடும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே தற்போது அமெரிக்காவில் இருக்கும் பஸில் ராஜபக்ச திடீரென இலங்கைக்கு வர முடிவு செய்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஏ)


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் செயற்குழு உறுப்பினர் **வைத்திய கலாநிதி திருமதி ஹஜேந்தினி ரஜீவ்** அவர்களின் அன்பு மகள்

**செல்வி ரட்சாயகி ரஜீவ்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்**



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



யாழ். நவாலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற வட - கிழக்கு மாகாணசபை நிர்வாக அலுவலர், கணக்காளர், யாழ். செயலகம்

**அமரர் உயர்திரு.**

### செல்வத்துரை பஞ்சாட்சரம்

**மண்ணில்** 08.07.1935 (G.M.H - மானிப்பாய்)

**விண்ணில்** 25.09.2022 (G.M.H - மானிப்பாய்)

சிறந்த நிர்வாகியாய், நேயத்தின் சிகரமாய்
நீங்கா இடத்தினை எம் மனங்களில் வகித்த
குடும்பத் தலைவர் ஆண்டு சுப கிருது புரட்டாதித்திங்கள்
இருபத்தைந்தாம் நாள்பூண்ட திதி பூர்வ அமாவாசையன்று
மானிப்பாய் மருதடி விநாயகர் திருவடி சேர்ந்தார்.
உங்களின் ஆத்மா சாந்தியுற இறைவனடி வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(cs41203) (2.6)



## மரண அறிவித்தல்



### திருமதி மதியாபரணம் சிவக்கொழுந்து

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் சிவக்கொழுந்து அவர்கள் (24.10.2022) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் இராசம்மா தம்பதியரின் மருமகளும், மதியாபரணத்தின் அன்பு மனைவியும், மதியழகன், அருந்ததி, வானதி, மாலதி, யசோதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாராணி, ஜெயதீசன், ஜெகதாஸ், சுகுணன், ஜெயகௌரி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, அன்னப்பிள்ளை, திருநாவுக்கரசு மற்றும் செல்லம்மா, இராசேந்திரம், நற்குணராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுப்பிரமணியம், கனகசபை, தங்கம்மா, சின்னம்மா, ஆறுமுகம் மற்றும் நாகேஸ்வரி, தங்கமணி, முத்துலட்சுமி, பாக்கியலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், துவாரகா-உமாதரன், வேணுகானன் - தர்சிகா, பிருந்தாவன், சனாதனன், தர்சிகா, கிஷான், அக்ஷனா, றிஷானா, சுதா, சாயினி, சாருகா, சந்தோஷ், ஜாஷ்வினி, ஜசிக்கா, ஜாஷ்வின், ஜான்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆருத்ராவின் ஆருயிர் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**36/9, B.A. தம்பி ஒழுங்கை,**
**[illegible]ணை, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு:0777 512 654**

**தகவல்:**
**வானதி-ஜெகதாஸ்**
**(மகள்)**

(CS 21364) 1/5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 . 09 . 1998



மறைவு 13 . 09 . 2022

கடந்த (13.09.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த

### அமரர் நிருத்திகா சிவகுமாரன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (25.10.2022) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (27.10.2022) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் பதாகைகளூடாகவும் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

077 4895 764 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 09 . 1972



இறப்பு 24 . 10 . 2022

### தர்மலிங்கம் துளசிராணி

தெல்லிப்பளை வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் துளசிராணி அவர்கள் நேற்று (24.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை யோகராணி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜதுர்வின், ஜதுசாயினி (2ம் வருட சித்த ஆயுள் வேத மருத்துவ பீடம், கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மங்கையற்கரசி, மங்கையர் திலகம், துளசி, கமலேஸ்வரி, மஞ்சுளா ஆகியோரின் சகோதரியும், கமலேஸ்வரி, கணேசலிங்கம், இராஜதேவி, விசயராணி, இராசலிங்கம், ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2022) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர். 077 028 0214

(CS 21362) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 18.06.1920 மறைவு 24.10.2022

### முத்துக்குமார் பொன்னம்மா

மண்கும்பானை பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமார் பொன்னம்மா அவர்கள் நேற்று (24.10.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கணபதிப் பிள்ளை, காந்தி, சரஸ்வதி, பூபதி, சிந்தாமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கணபதிப்பிள்ளை, ஆறுமுகம், நடராசா, சிவசம்பு, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், நாகரத்தினம், மரகதம், வீரசிங்கம், செல்வராணி, விஜயலட்சுமி, பரமலிங்கம், யோகநாதன், குணசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், மகாலிங்கம் மற்றும் புதுமைலீலா, காலஞ்சென்ற சித்திரவடிவேல் மற்றும் மங்களலீலா, பொன்சந்திரன், உதயராணி, ரஜனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வளர்மதி, இளர்மதி, மேனன், குட்டி, கண்ணா, தீபன், குகதாஸ் காலஞ்சென்ற கவிதா, மற்றும் குகேஸ், ரஜீவன், சிந்து, தினேஸ், லக்சியா, காலஞ்சென்ற கிருபாகரன், மற்றும் லக்ஷியா, லாவண்யா, பிரியா, சதீஸ், ஜெலன், யசோ, தர்சி, சுசி, வாகீசன், கஜீ, விதூஷன், விதுசா, நிதர்சன், நிதர்சா, அகிலேஸ், தரண்யா ஆகியோரின் பேர்த்தியும், சஜிந்தன், தனுஷியா, திபிசன், ஜஷ்வின், மிதுன், அஸ்மிதா, அபிஷயன், ஜசன்யா, சஜிந், சர்வின், பிரணிஸ், பிரண்யா, பிரஜித், சந்தோஷ், பிரவின், ஆரணிகா, சப்தனா, ஆதிஷா, பிரபாஷா, கௌசிக், லுஷாத், றியானு, இனியா, தீரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொ.இல:077 960 4168 (குகதாஸ்)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திடம் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆகக்கூடுதலாக மடுக்கல்வி வலயத்தில் 94பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். மன்னார் கல்வி வலயத்தில் 72பேரும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 52பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 51 பேரும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 48 பேரும் இடைவிலகியுள்ளனர். அதிகளவில் ஆண்களே இடைவிலகியுள்ளதுடன் 10ஆம் மற்றும் 11ஆம் தரங்களைச் சேர்ந்தவர்களே இதில் அதிகமாகவும் உள்ளனர்.

2021ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆகக்கூடுதலாக கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 181 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 148 பேரும், மன்னார் கல்வி வலயத்திலிருந்து 135 பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திலிருந்து 119பேரும் இடைவிலகியுள்ளனர்.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் வடக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலாக வலிகாமம் கல்வி வலயத்தில் 123 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 110பேரும், மன்னார் கல்வி வலயத்தில் 101பேரும் இடைவிலகியுள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னரான அதிகரித்த இடைவிலகல்களுக்கான காரணம் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரிடம் கேட்டபோது, வறுமையும் இதற்குப் பிரதான காரணம். அதனைவிட கொரோனா காலத்தில் பாடசாலைகளுடன் தொடர்பில்லாது நீண்டகாலம் இருந்தமையால் மாணவர்கள் தொழில்களை நாடிச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சில பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு திருமணமும் செய்து வைத்துள்ளனர் என்று குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## இளைஞன்...

மோதியதில் அந்தப் பகுதியைச் சேர்ந்த நோபட் நிலக்சன் (வயது - 19) என்ற இளைஞன் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளாரென இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- கீரிமலை பிரதான வீதியில் சேந்தான் குளம் - வசந்தபுரம் பகுதியில் தனது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த இளைஞன் மீது, பின்னால் வந்த தனியார் பேருந்து மோதிவிட்டு நிற்காது சென்றுள்ளது. இளைஞன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

தப்பிச் சென்ற பேருந்தை கிராம மக்கள் கலைத்துப் பிடித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பேருந்தைக் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதுடன், 50 வயதான சாரதியையும் கைது செய்தனர். முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் மதுபோதையில் சாரத்தியம் மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஒ-125)

## எரிபொருள்...

இருந்து 10 லீற்றராக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். இதன் முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் தொழில் சார்ந்த முச்சக்கரவண்டிகளை பதிவு செய்யும் பணி நவம்பர் 1ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் தொழில்சார்ந்த முச்சக்கர வண்டி சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலின் போதே இந்த விடயங்கள் வெளியிடப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் உள்ள அனைத்துப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிகளுக்கும் வாரத்துக்கு 10 லீற்றர் எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் இயங்கும் பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிகளை பதிவு செய்யும் நடவடிக்கை நவம்பர் 6ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் அந்த முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டாவை அதிகரித்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கையில் 10 இலட்சத்து 80 ஆயிரம் முச்சக்கர வண்டிகள் உள்ளன. அவற்றில் சுமார் 4 இலட்சம் முச்சக்கர வண்டிகள் தொழில்முறை பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதாக முச்சக்கர வண்டி சங்கங்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 3 இலட்சம் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 13ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகளையும் பதிவு செய்ய முடியாத பட்சத்தில் பொலிஸில் பதிவு செய்து முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டாவை வழங்க இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள் ஆகியோருக்கு துரிதமாக தெளிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## போதைப்பொருள்...

கான விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கவேண்டிய பொறுப்பு உள்ளது. 15 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டவர்களே உயிர்கொல்லி போதைக்கு அதிகளவு அடிமையாகின்றனர். எனவே குருமார்களின் தலைமையில் அனைவரும் கூட்டுப்பொறுப்பு ஏற்று அதனை ஒடுக்குவதற்கு முன்வர வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை தொடர்பில் எமது மக்களும் ஆரம்பத்தில் அவதானம் செலுத்தவில்லை.

முப்படையினர் இங்குநிலைகொண்டுள்ளனர். உயிர்கொல்லிப் போதைப்பொருளை இங்கு கொண்டு வருவதற்கு அனுமதிப்பவர்களாகவும் விற்பனை செய்பவர்களுக்கு ஊக்கிகளாகவும் அவர்கள்தான் இருக்கின்றார்கள். உயிர்கொல்லி போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கு அச்சமாக உள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். இலங்கையிலே மொத்த படைகளினுடைய எண்ணிக்கையில் 70 சதவீதமான படைகள் வடக்கிலும் கிழக்கிலும்தான் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு இருக்கையில் எப்படி உயிர்கொல்லி போதைப்பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன?

எமது இளம் சமுதாயத்துக்கு தேசம் பற்றிய எண்ணம் வரக் கூடாது என்பதற்காக அவர்களது சிந்தனைகளை மடைமாற்றுவதற்காக உயிர்கொல்லி போதைப் பாவனையை அரசாங்கம் திட்டமிட்டு முன்னெடுக்கின்றது.

எமது தாயக தேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தாய் தந்தையரிடமும் பகிரங்கமாக ஒன்றைக் கேட்க - கோரிக்கை வைக்க - விரும்புகின்றேன்.

எங்களுடைய பிள்ளைகள் எங்கே போகின்றார்கள்? அவர்களது நண்பர்கள் யார்? அவர்களது நாளாந்த செயற்பாடுகள் என்ன? எல்லாவற்றையும் கண்காணிக்கவேண்டும்.

இது ஒரு கூட்டுப் பொறுப்பு. சமூகத்திலுள்ள அனைவரும் இதில் பங்காளர்களாக வேண்டும். சமயத் தலைவர்கள் தலைமை தாங்கவேண்டும். எமது சந்ததியை பாதுகாக்கவேண்டும் என்று நினைத்தால் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ஒ-125)

## வங்கக் கடலில்...

இன்று காலை இந்த சூறாவளி பங்களாதேஷ் கடற்பிராந்தியம் நோக்கி நகரக் கூடும். இந்த சூறாவளியால் இலங்கைக்கு பாதிப்புகள் ஏதும் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சில பகுதிகளில் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

**(முன்னர் வந்த செய்தி உள்ளே)**

## சிறுவன்...

பாடசாலையிலிருந்து இடைவிலகி பான்சிப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் பணிபுரிபவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இணுவில், கலாஜோதி விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள உறவினர் வீட்டுக்கு துவிச்சக்கரவண்டியில் சென்று வீடு திரும்பும்போது, தெல்லிப்பழையிலிருந்து 2 மோட்டார் சைக்கிளில் சென்ற 4 பேர் கொண்ட குழுவே வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையிலும், கையிலும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சிறுவன் சேர்க்கப்பட்டுள்ளான். வாள்வெட்டுக்கான காரணம் தெரியவரவில்லை. (அ-ஒ-26-125)

## இளைஞர்கள்...

அதேயிடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் லம்போசிகன் (வயது - 24) பன்னையம் பதியைச் சேர்ந்த சுசீந்திரகுமார் சசிகாந்தன் (வயது - 24) இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

'நேற்றுமாலை லம்போசிகனுக்குச் சொந்தமான தோட்டக்காணியில் 6 இளைஞர்கள் ஒன்று கூடினர். இதன்போது மதுபான விருந்து இடம்பெற்ற பின்னர் ஒரு இளைஞர் கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார். அவரைக் காப்பாற்ற குதித்த மற்றையவருமாக இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அங்கிருந்த ஏனைய 4 இளைஞர்களே எமக்குத் தகவல் வழங்கினர்' என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெறவுள்ளது. இதன்போது உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும். (அ-ஒ-26-125)

## 19 மாணவர்களுக்கு...

தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகள் இடம்பெற்றுள்ள நிலையில், புதுமுக மாணவர்களைப் பகிடி வதைக்குட்படுத்திய மூத்த மாணவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது குற்றம் நிரூபிக்கப்பட்ட கலைப் பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் 14 பேருக்கு ஆறு மாத கால வகுப்புத் தடையும், தொழில் நுட்ப பீடத்தின் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள் 4 பேருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும், விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர் ஒருவருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட மாணவர்கள், தெல்லிப்பழை பகுதியில் இளநிலை மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளைக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டு அவர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டிருந்தார்கள்.

விஞ்ஞானபீடத்தின் முதலாம் ஆண்டு மாணவனை விடுதியில் வைத்து பகடிவதை என்ற பெயரில் தாக்கியமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக் கெதிரான தண்டனைச் சாசனத்தின் படி, குற்றங்களின் தனமைக்கேற்ப விசாரணைக் குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக் காலத்தை மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை செய்தது. அந்த பரிந்துரைகளுக்கமைய பேரவையால் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. பேரவையின் தண்டனை குறித்த அறிவிப்பு அந்தந்த பீடாதிபதிகளின் ஊடாகத் துணைவேந்தரால் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக் காலத்தினுள் குறித்த மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள்ளும் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும் தண்டனைக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பவராயின் விடுதியை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்புத்தடை விதிக்கப்பட்ட சிங்கள மாணவர்களில் ஒருவரின் உறவினர் பொலிஸ் திணைக்களத்தில் உயர் பதவியில் உள்ளாரெனவும், அவர் ஊடாக தடை நீக்கத்துக்கான அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்த மாணவர்களுக்கான வகுப்புகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காட்டு மக்கள் மழையால் இடப்பெயர்வு!

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 25

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் இடைக்காட்டுக் கிராமத்தில் வெள்ள இடரால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அங்குள்ள வயல் நிலங்களும் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. மழை காரணமாக இடைக்காட்டுக் கிராமத்தில் முதன்மை வீதி வெள்ளத்தில் மூழ்கி யுள்ளது. இடைக்காட்டு வீதியின் அருகில் உள்ள ஒரு சிறிய குளம் வெள்ளத்தால் நிரம்பியுள் ளது.

இந்தக் குளத்தின் மேலதிக நீர் தனியார் காணி ஒன்றின் ஊடாகவே கடந்த காலத்தில் வழிந்தோடியது. தற்போது தனியார் காணி மண்போட்டு நிரப்பப்பட்டுள் ளதால் மழைவெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தேங்கும் வெள்ள நீர் மக்களின் வீடுகள் மற்றும் வயல் நிலங்களுக்குள் புகுந்துள் ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். பிரதேச சபைக்கு சொந்தமான இடைக்காட்டு முதன்மை வீதிக்கான வடிகாலமைப்பு சரியாக செய்து கொடுக்கப்படாமையும் இந்த நிலைக்குக் காரணம் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேரத் தலைமையிலான குழுவினர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.குகனேசன் ஆகியோர் நிலமைகளை பார்வையிட்டுள்ளதுடன் தற்காலிகமாக நீர் வழிந்தோடக்கூடிய வகையில் கனரக இயந்திரம் கொண்டு சீர்செய்துள்ளார்கள்.



ஆயினும் வெள்ள நீர் முழுமையாக வழிந்தோடாத நிலைமையே காணப்படுகின்றது. பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் இடைக்காட்டு வீதிக்கான சரியான வடிகாலமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிலர் தற்காலிகமாக தமது உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்கியுள்ளனர். (எ-19)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## எரிவாயு சிலிண்டர் விலை குறையலாம்

கொழும்பு, ஒக். 25

உலக சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, நவம்பர் முதல் வாரத்துக்குள் எரிவாயுவின் விலை மேலும் குறையும் வாய்ப்பு உள்ளது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அண்மையிலும் சந்தை நிலைமைக்கு ஏற்ப லிட்ரோவின் விலை குறைக்கப்பட்டது. இதுவரை பெற்ற கடன்களுக்காக லிட்ரோ எரிவாயு நிறுவனம் மேலும் 7.5 பில்லியன் ரூபாவை கடந்த வெள்ளிக்கிழமை திறைசேரிக்கு மீளச் செலுத்தியுள்ளது. செப்ரெம்பரில் லிட்ரோ நிறுவனம் 6.5 பில்லியன் ரூபாவை செலுத்தியிருந்த நிலையில், ஒக்ரோபர் மாதத்துக்குள் செலுத்தவேண்டிய 7.5 பில்லியன் ரூபாவை கடந்த வெள்ளிக்கிழமை செலுத்தியது - என்றார். (எ)

### சமூகச்...

தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்திய சிவனேசன் என்ற உறுப்பினரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலணை கிழக்குப் பெருங்குளம் முத்துமாரியம்மன் பகுதியை அண்மித்த பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் உயிர் கொல்லி போதைப்பொருள் பாவனை தொடர்பிலும் மாடுகள் திருடப்படுவது மற்றும் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்படுவது என்பவற்றை தடுப்பதற்காக தீவக சிவில் சமூகத்துடன் சேர்ந்து இவர் செயற்பட்டு வந்ததாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதுவரை சந்தேகநபர் அடையாளம் காணப்படாத நிலையில் வாள்வெட்டு குறித்த காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ஓ-125)

### இன்று...

இன்றுமாலை 5.27 மணியளவில் சூரிய கிரகணத்தை, சுமார் 22 செக்கன்கள் வெற்றுக் கண்களால் பார்வையிட முடியும். இதனால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார். (அ-ஓ-இ)

### மாநகரசபை...

சில மணி நேரங்களிலேயே, யாழ். மாநகர சபையின் பணியாளர்கள் சீர்படுத்தி இயல்புநிலைக்கு கொண்டு வந்தனர். தீபாவளி நாள் என்றும் பாராமல் கழிவு வாய்க்கால்கள், வெள்ள வாய்க்கால்களை தூர்வாரி வெள்ளம் வடிந்தோடச் செய்த அவர்களது பணியை பலரும் பாராட்டினர். (அ-ஓ-26)

## வேலைவாய்ப்பு

ஆரியகுளம் அக்ஷதை உயர்தர சைவ உணவகத்தில் பின்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- உணவு பரிமாறுபவர் (பகல் / இரவு)
- சமையல் உதவியாளர் (பகல் / இரவு)
- துப்புரவுப் பணியாளர் (பகல் / இரவு)
- மரக்கறி வெட்டுபவர்

தொடர்புகளுக்கு: 077 3611 301
077 711 2269

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 120 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் கார்பெட் வீதியில் தண்ணீர்த் தாங்கி அருகில் இரண்டு பரப்பாகவும். மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.
பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.
மேட்டு நிலம். விவசாயம் செய்வதற்கு. வீடு கட்டுவதற்கு உகந்த நிலம். நல்ல சூழல். நன்னீரூற்று.
1 பரப்பின் விலை முன்பகுதி 200,000/=, பின்பகுதி 150,000/=,
(தரகர் தேவையில்லை. பார்வையிடும் நேரம் : 8.00am - 5.30pm)

தொடர்புகளுக்கு: 077 623 4204
077 288 0152
077 076 0389

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில்**
**15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
- ✓ ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135
077 408 2649
076 436 5814

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 25.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org